நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர்!

நேற்று (19.08.2025) நிகழ்வுகள்!

1. பிரதமர் இன்டன்ஷிப் திட்டத்தின் சுணக்கத்துக்கு காரணம் என்ன?

கனிமொழி கருணாநிதி கேள்வி!

PM Internship எனப்படுகிற பிரதமர் இன்டன்ஷிப் திட்டம் செயல்படுத்தப்படும் முறை, அதில் நிலவும் தேக்கங்கள் குறித்து திமுக துணைப் பொதுச் செயலாளரும், திமுக நாடாளுமன்றக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி மக்களவையில் கேள்விகளை எழுப்பினார்.

"PM Internship எனப்படுகிற பிரதமர் இன்டன்ஷிப் திட்டம் தொடங்கப் பட்டதிலிருந்து அத்திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற இளைஞர்களின் எண்ணிக்கை எத்தனை?

இத்திட்டத்தை செயல்படுத்துதலில் தனியார் நிறுவனங்களுடன் போதுமான ஒருங்கிணைப்பு இல்லாததால், PM Internship இல் குறைந்த அளவிலான இளைஞர்களே பங்கேற்கிறார்கள் என்பதை ஒன்றிய அரசு அறிந்துள்ளதா?

அப்படியானால் இத்திட்டத்தின் செயல்திறனை மேம்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்னென்ன?

இத்திட்டத்தின் கீழ் மிகக் குறைந்த ஆட்சேர்ப்புக்கான காரணங்களைக் கண்டறிய அரசாங்கம் ஏதேனும் மதிப்பாய்வு அல்லது மதிப்பீட்டை நடத்தியதா?

அப்படியானால், அதன் விவரங்கள் மற்றும் இல்லையென்றால், அதற்கான காரணங்கள் என்ன?

PM Internship திட்டத்தை மிகவும் பயனுள்ள வகையில் மறுசீரமைக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதா, அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?"

ஆகிய கேள்விகளை கனிமொழி கருணாநிதி எம்பி கேட்டிருந்தார்.

2. மின்சார வாகன விற்பனையை ஊக்குவிக்க திட்டம் என்ன?

பொள்ளாச்சி ஈஸ்வரசாமி கேள்வி

மின்சார வாகனங்கள் உற்பத்தியை அதிகரிக்கவும் அதன் விற்பனையை ஊக்குவிக்கவும் ஒன்றிய அரசின் திட்டங்கள் மற்றும் இலக்கு குறித்து பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரசாமி கேள்வி எழுப்பியுள்ளார். இவ்வகை வாகனங்களுக்கு ஆண்டொன்றிற்கு தேவைப்படும் சுமார் 400 ஜிகாவாட் மணிநேரம் (GWh) பேட்டரி திறன் உற்பத்திக்கு அரசு எடுத்திருக்கும் நடவடிக்கைகள் என்ன? பேட்டரி உற்பத்தியில் பயன்படுத்தப்படும் முக்கிய கனிமமான லித்தியத்தின் தேவை உலகளாவிய அளவில் அதிகரித்து வருகிறது. அதை கருத்தில் கொண்டு சுற்றுச் சூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்தாத வகையில் மேம்பட்ட அமைப்பில் உள் நாட்டில் பேட்டரி ஆராய்ச்சி அமைப்பை உருவாக்க அரசின் திட்டங்கள் என்ன என்றும் அவர் கேட்டுள்ளார்.

3. மாம்பழ கூழுக்கு 12% ஜிஎஸ்டி வரி என்பது அநியாயம்!

பி. வில்சன் குற்றச்சாட்டு

மாம்பழ கூழ் மீதான 12 சதவீத சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி) அதன் உற்பத்தியை மோசமாக பாதித்துள்ளது என்பதை சுட்டிக்காட்டி மாநிலங்கலவை உறுப்பினர் பி. வில்சன் கேள்வி எழுப்பியுள்ளார். ஜிஎஸ்டி வரியை 5 சதவீதமாகக் குறைக்க வேண்டும் என்ற தமிழ்நாட்டின் நெடுநாள் கோரிக்கையை ஒன்றிய அரசு பரிசீலிக்காதது ஏன் என்றும் அவர் கேட்டுள்ளார்.

4. மின்கழிவுகள் மூலம் ஈட்டிய ஜிஎஸ்டி தொகை எவ்வளவு? அதை முறைப்படுத்தும் நடவடிக்கைகள் என்ன?

திருச்சி சிவா கேள்வி

மின்சாரம் மற்றும் மின்னணுக் கழிவுகள், பேட்டரி கழிவுகள் துறைகளில் பிரித்தெடுத்தல், மறுசுழற்சி செய்தல், துண்டாக்குதல் அல்லது புதுப்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள ஜிஎஸ்டியின் கீழ் பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்கள் குறித்து திமுக மாநிலங்கலவை உறுப்பினர் திருச்சி சிவா கேள்வி எழுப்பியுள்ளார்.

கடந்த ஐந்து ஆண்டுகளில் முறையான மறுசுழற்சி முறையில் ஈட்டிய ஜிஎஸ்டி வரித் தொகை எவ்வளவு? மறுசுழற்சித் துறையில் முறைசாரா அல்லது பதிவு செய்யப்படாத ஆபரேட்டர்களால் ஏற்படும் வருவாய் இழப்பு எவ்வளவு? மின்-கழிவு மற்றும் பேட்டரி கழிவு மறுசுழற்சிக்கான முறைப்படுத்துதலை ஊக்குவிப்பதற்கும் வரி தவிர்ப்பைக் குறைப்பதற்கும் அரசிடம் உள்ள திட்டங்கள் என்ன? அதன்மூலம் எதிர்பார்க்கப்படும் வருவாய் எவ்வளவு எனவும் அவர் கேட்டுள்ளார்.

5. தோல்வியில் முடிந்ததா மேக் இன் இந்தியா திட்டம்?

ஜி.செல்வம் - சி.என்.அண்ணாதுரை கேள்வி

தமிழ்நாட்டில் மேக் இன் இந்தியா திட்டத்தின் கீழ் துறை வாரியாக தொடங்கப்பட்ட மொத்ததிட்டங்களின் எண்ணிக்கை குறித்து திமுக மக்களவை உறுப்பினர்கள் செல்வம் மற்றும் சி.என். அண்ணாதுரை கேள்வி எழுப்பியுள்ளனர்.

தமிழ்நாட்டில் இந்தத் திட்டங்களின் செயல்பாடு குறித்து அரசு நடத்தியுள்ள ஆய்வுகள் என்ன? அதேபோல் மேக் இன் இந்தியா திட்டத்தின்கீழ் ஏற்பட்ட தாமதங்கள் அல்லது ரத்து செய்யப்பட்ட திட்டங்கள் எவை? தமிழ்நாட்டில் இந்த முயற்சியின் கீழ் ஒதுக்கப்பட்ட ஆனால் பயன்படுத்தப்படாமல் உள்ள தொழில் துறை வளாகங்கள் அல்லது சிறப்பு பொருளாதார மண்டலங்கள் (SEZ) யாவை? மேலும் இத்திட்டத்தை சிறப்பாக செயல்படுத்த அரசிடம் உள்ள செயல்திட்டங்கள் என்ன என்றும் அவர்கள் கேட்டுள்ளனர்.

6. கிராமப்புறங்களில் புற்றுநோய் பரிசோதனை மையங்களுக்கான செயல் திட்டம் என்ன?

டாக்டர் கனிமொழி சோமு கேள்வி

அனைத்து கிராமப்புறங்களிலும் புற்றுநோய் பரிசோதனை மையங்களுக்கான செயல் திட்டத்தின் நிலை குறித்து திமுக மாநிலங்கலவை உறுப்பினர் டாக்டர் கனிமொழி சோமு கேள்வி எழுப்பியுள்ளார்.

நாட்டில் செயல்படும் புற்றுநோய் பரிசோதனை மையங்களின் எண்ணிக்கை என்ன? கிராமப்புறங்களில் புற்றுநோய் பரிசோதனை நடத்துவதில் மருத்துவர்கள், துணை செவிலியர்கள், சுகாதார உதவியாளர்கள் மற்றும் பொது சுகாதார அதிகாரிகள் (CHOS) உள்ளிட்ட மருத்துவ நிபுணர்களுக்கு பயிற்சி அளிக்க அரசின் திட்டம் என்ன? என்றும் அவர் கேட்டுள்ளார்.

7. பட்டியல் சாதி மக்களுக்கான நிதியை பயன்படுத்தாதது ஏன்?

ஆ. இராசா எம்.பி. கேள்வி

பட்டியல் சாதியினரின் நலனுக்காக ஒதுக்கப்பட்ட நிதியை குறைவாகப் பயன்படுத்தப் பட்டதற்கான காரணங்கள் குறித்து நாடாளுமன்றத்தில் திமுக துணைப் பொதுச் செயலாளர் ஆ. இராசா எம்.பி. கேள்வி எழுப்பியுள்ளார்.

கடந்த ஐந்து ஆண்டுகளில், எஸ்சி துணைத் திட்ட மேம்பாட்டு செயல் திட்டத்தின் கீழ், ஒதுக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட தொகை மற்றும் நிதி குறைவாகப் பயன்படுத்தப்பட்டதற்கான காரணங்கள், மேலும் எஸ்சி-களின் நலனுக்காக ஒதுக்கப்பட்ட மொத்த நிதி பயன்படுத்தப்படுவதை உறுதி செய்ய அரசு எடுத்த நடவடிக்கைகள் முதலிய தகவல்களை எம்.பி. ஆ. இராசா கேட்டுள்ளார்.

8. இலக்கை அடைகிறதா மஞ்சள், ஜமக்காள ஏற்றுமதி?

ஈரோடு கே.இ.பிரகாஷ் கேள்வி

2019-20 முதல் 2024-25 வரை ஒவ்வொரு ஆண்டும் ஈரோட்டில் இருந்து மஞ்சள் மற்றும் பவானியில் இருந்து கம்பளங்கள் ஏற்றுமதி செய்த விவரங்கள் கேட்டு ஈரோடு திமுக மக்களவை உறுப்பினர் பிரகாஷ் கேள்வி எழுப்பியுள்ளார்.

மேற்கூறிய ஒவ்வொரு தயாரிப்பு வகைகளுக்கும் அதன் ஏற்றுமதி அளவுடன்களிலும் அதன் மதிப்பு கோடியிலும் வெளியிட வேண்டும், இந்த தயாரிப்புகளுக்கு 2025-26 ஆம் ஆண்டுக்கு நிர்ணயிக்கப்பட்ட ஏற்றுமதி இலக்குகள் மற்றும் அவற்றை அடைய எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன? சர்வதேச சந்தைகளில் இந்த ஜிஐ-டேக் செய்யப்பட்ட தயாரிப்புகளை ஊக்குவிக்க அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட குறிப்பிட்ட முயற்சிகள் யாவை என்றும் அவர் கேட்டுள்ளார்.

இராணிப்பேட்டை நகராட்சி காரையில் நடந்த 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாமில் மனுக்கள் மீது உடனடி தீர்வு காணப்பட்ட பயனாளிகளுக்கு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி ஆணைகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சியர் ஜே.யு.சந்திரகலா, நகராட்சி தலைவர் சுஜாதா வினோத், நகர செயலாளர் பி.பூங்காவனம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் இசட்.ஏ. அஜ்மல் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

உள்ளாட்சி, கிராம நிர்வாகத்தின்கீழ்

வேலை வாய்ப்புகளை உருவாக்க ஒன்றிய அரசிடம் திட்டம் உள்ளதா?

மாநிலங்களவையில் – இரா.கிரிராஜன் கேள்வி!

புதுடெல்லி, ஆக.20- தமிழ்நாட்டில் கிராமப்புற வாழ்வாதார பயிற்சி மையங்களை நிறுவுவதற்கும், உள்ளாட்சி மற்றும் கிராம நிர்வாகத்தின் கீழ் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கும் ஒன்றிய அரசிடம் என்னென்ன திட்டங்கள் உள்ளன என்று நாடாளுமன்றத்தில் இரா.கிரிராஜன் கேள்வி எழுப்பி உள்ளார்.

நாடாளுமன்ற கூட்டத் தொடரில் கலந்துகொண்டுள்ள திமுக எம்.பி. இரா. கிரிராஜன், தமிழ்நாட்டில் கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்புகளை அதிகரிக்கும் வகையில் கிராமப்புற வாழ்வாதார பயிற்சி மையங்களை நிறுவுவதற்கு என்ன திட்டங்கள் உள்ளன? உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் கிராம நிர்வாகத்தின் கீழ் பல்வேறு வேலைவாய்ப்புகளை உருவாக்க தமிழ்நாட்டற்கு ஒன்றிய அரசு ஏதேனும் நிதி ஒதுக்கியுள்ளதா? என பஞ்சாயத்து ராஜ் அமைச்சரிடம் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதில் அளித்த பஞ்சாயத்து ராஜ் அமைச்சர் எஸ்.பி. சிங் பாகல், தமிழ்நாட்டில் தனியாக கிராமப்புற வாழ்வாதார பயிற்சி மையத்தை நிறுவும் திட்டம் எதுவும் இல்லை என்றும், சமூகப் பணியாளர்கள் மற்றும் திட்ட ஊழியர்களுக்கு பயிற்சி அளிக்க மாநில ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் நிறுவனத்தில் (SIRD&PR) கிராமப்புற வாழ்வாதாரத்திற்கான தனி மையங்கள் உள்ளதாக தெரிவித்துள்ளார்.

சுயதொழில் திறன் பயிற்சியை வழங்குவதற்காக அனைத்து மாவட்டங்களிலும் கிராமப்புற சுயதொழில் பயிற்சி நிறுவனங்கள் (RSETI) நிறுவப்பட்டுள்ளதாகவும், தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புதுமை நிறுவனம் (EDII) உள்ளிட்ட நிபுணத்துவ நிறுவனங்களுடன் இணைந்து தொழில்முனைவோர் பயிற்சியும் வழங்கப்படுவதாகவும் பதில் அளிக்கப்பட்டுள்ளது.

கிராமப்புறங்களில் வசதுவந்த உறுப்பினர்களைக் கொண்ட ஒவ்வொரு வீட்டிற்கும் குறைந்தது நூறு நாட்கள் உத்தரவாதமான கூலியுடன் கூடிய வேலை வாய்ப்பை வழங்குவதை நோக்கமாக கொண்டு, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டம் செயல்படுத்தபடுகிறது என்றும் பதில் கூறியுள்ளார்.

இந்த திட்டத்தின்படி, 2020-21 முதல் 2024-25 வரை 17,291.35 லட்சம் பணி நபர்களுக்காக, ரூ. 48,389.82 கோடி விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் பதிலில் விவரங்கள் தரப்பட்டுள்ளன.

மாநிலப் பட்டியலில் உள்ள ஊராட்சி நிர்வாகத்திற்கு மாநில அரசின் முயற்சிகளை, ஒன்றிய அரசின் பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம் ஆதரித்து, நிறைவு செய்வதாகவும் அவரது பதிலில் கூறப்பட்டுள்ளது.

ஊராட்சி அமைப்புகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மற்றும் செயல் பாட்டாளர்களின் திறனை வளர்ப்பது மற்றும் பயிற்சி அளிப்பதன் மூலம் பஞ்சாயத்துகளை வலுப்படுத்தும் முதன்மை நோக்கத்துடன் மத்திய அரசின் நிதியுதவி பெற்ற ராஷ்ட்ரிய கிராம ஸ்வராஜ் அபியான் (RGSA) செயல்படுத்தப்படுவதையும் பதிலில் குறிப்பிட்டுள்ளார்.

கிராம ஊராட்சி அலுவலகம், அதன் கணினிமய மாக்கல் போன்ற உள்கட்டமைப்பு ஆதரவை வழங்குதல், ஊராட்சிகளுக்கிடையேயான ஆரோக்கியமான போட்டி சூழலை ஊக்குவித்தல், சேவைகள் மற்றும் பொது நலனை மேம்படுத்துவதில் சிறப்பாகச் செயல்படும் பஞ்சாயத்துகளுக்கு ஊக்கத்தொகை உள்ளிட்ட விருதுகள் வழங்குதல் ஆகிய திட்டங்கள் தமிழ்நாடு உட்பட நாட்டின் அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள அனைத்து கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் செயல்படுத்தப்படுகின்றன என பதிலில் விவரிக்கப் பட்டுள்ளது. கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளில் (RLB) பல்வேறு மேம்பாட்டுப் பணிகளுக்காக, மத்திய நிதி ஆணையத்தின் (CFC) மானியங்களைப் பெறுவதாகவும் அமைச்சரின் பதிலில் தகவல் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 5 ஆண்டுகளில் தமிழ்நாட்டிற்கு மத்திய நிதி ஆணையத்தின் மூலம் ரூ. 14,782 கோடியும், தேசிய கிராம சுயாட்சி இயக்கத்தின் மூலம் ரூ. 167.19 கோடி, ஊராட்சிகளுக்கான ஊக்கத்தொகையாக ரூ. 9.73 கோடி ஆகியவை வழங்கப்பட்டுள்ளதாக பதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பஞ்சாய்தது ராஜ் திட்டங்களின் கீழ் முன் கூட்டியே எந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கும் நேரடியாக நிதி ஒதுக்குவது இல்லை என்றும், சம்பந்தப்பட்ட மாநிலம் தான் உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்து விடுவிக்கிறது என்பதையும் பதிலில் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆனாலும், 2021-22ஆம் ஆண்டு முதல், ஆண்டுதோறும் நடைபெறும் தேசிய பஞ்சாயத்து விருதுகள் போட்டியில் வெற்றி பெறும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு, ஊக்கத்தொகை திட்டத்தின் கீழ், நிதி நேரடியாக வழங்கப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. – நொளம்பூர் வே.ராஜன் பங்கேற்பு:

மதுரவாயல் 149வது வட்டத்தில் 'உங்களுடன் ஸ்டாலின்' சிறப்பு முகாம்!

வட்டச் செயலாளர் த.ரமேஷ் அறிக்கை!

சென்னை, ஆக.20 சென்னை தெற்கு மாவட்டம் மதுரவாயல் தெற்கு பகுதி 149வது வார்டில் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாம் இன்று (20.08.2025 புதன்கிழமை) காலை 8.00 மணிக்கு கலைஞர் உள்விளையாட்டு அரங்கம், தாகூர் தெரு, இராமகிருஷ்ணா நகர், வளசரவாக்கத்தில் நடைபெறுகிறது.

மதுரவாயல் தெற்கு பகுதிச் செயலாளர், மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி துவக்கி வைக்கிறார்.

இவ்விழாவில் சென்னை மாநகராட்சி 11-வது மண்டல குழுத் தலைவரும், மதுரவாயல் வடக்கு பகுதிச் செயலாளருமான நொளம்பூர் வே.ராஜன், மதுரவாயல் தெற்கு பகுதி துணைச் செயலாளர் வே.மதியழகன் 149வது வார்டு மாமன்ற உறுப்பினர், செல்வி ரமேஷ் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

எம்.கிருஷ்ணமூர்த்தி, ஆர்.சுரேஷ்பாபு. எம்.குமார். திருமதி. குப்பு ராஜேந்திரன், பி.எஸ்.துரைசாமி, எம்.முரளி, எஸ்.ஆறுமுகம், கே.ஜெகதீசன், கே.முத்துராமன், எஸ்.அமுல்ராஜ், ஆர்.சிவலிங்கம், கே.சரவணன், எம்.ஏ. வி.சீனிவாசன், எம்.ஏ.வீர ராகவன், கே.ஜி.ஜெயவேல், எம்.கே.தணிகாசலம், எஸ்.ரவி, சி.பாலமுருகன், பி.சேகர், எம்.கலாநிதி, ஆர்.சந்திரகுமார், ஜி.கிருஷ்ணமூர்த்தி. ஏ.கணேசன், ஆர்.எம்.பழனியப்பன், கே.ஆனந்த் கார்த்திக், புலவர் கருப்பையா, என்.ராஜா, எஸ். கார்த்திக், என்.கிருஷ்ணன். ஆர்.வினோத். எஸ்.பரத், எஸ்.பி.புஷ்ப ராஜ், த. மோகன்ராஜ், த.சித்ராதங்க ராஜ், எஸ்.சுந்தர்ரா ஜன், வி.ராஜேந்திரன், எஸ். சுரேஷ் மோசஸ், எம்.அமுல் ராஜ், த.மோகனவேல்,வி.டி.அரசு, பி.பொன்முத்து ரமேஷ், சி.சிவராம கிருஷ்ணன், வி.ஹேமந்த்குமார், எஸ்.குகாகார்த்திக், கே.பிரதாபன், எம்.சின்னா, என். ராஜா, ஜே.அமுல்ராஜ், எஸ்.சத்யநாராயணன், ஆர். விஸ்வ நாதன், என். உடையப்பன், என். முருகேசன், பி.கிருஷ்ணன், பி.ராம ஜெயம், ஜி.இ.சரவணன். வி.கார்த்திக் சத்திய நாராயணன், ஆர்.ஹரி, இ.பவானி, பி.செல்வ குமாரி, சுஜாதா நரசிம்மன், என்.கீதா, கிருஷ்டி, ஜெயந்தி, ஆர்.யாமினி மற்றும் கழகத்தின் மாவட்ட, பகுதி, வட்டத்திற்கு உட்பட்ட நிர்வாகிகள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், மகளிரணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் பொது மக்கள் முகாமில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு 149வது வட்டக் கழக செயலாளர் த.ரமேஷ் கேட்டுக் கொள்கிறார்.

மயிலை த.வேலு ஆலோசனை! நந்தனம் கி.மதி – கோவி.லெனின் பங்கேற்பு!

123 வது வட்ட செயற்குழு நிர்வாகிகள் கூட்டம்!

வட்டக் கழகச் செயலாளர் மு.இ.ஏழுமலை அறிக்கை!

சென்னை, ஆக. 20- மயிலை 123வது வட்டச் செயலாளர் மு.இ.ஏழுமலை விடுத்துள்ள அறிக்கை வருமாறு-

சென்னை தென் மேற்கு மாவட்டம் மயிலை மேற்கு பகுதி 123வது வட்ட கழக நிர்வாகிகள் - வட்ட செயற்குழுக் கூட்டம் இன்று (20.08.2025 - புதன்கிழமை) மாலை 7.00 மணியளவில் கே.பி. தாசன் சாலையில் உள்ள சமுதாய நலக்கூடத்தில் எனது (வட்டச் செயலாளர் மு.இ. ஏழுமலை) தலைமையில் நடைபெறுகிறது.

கழக தலைவர் தமிழ்நாடு முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க ஓர் அணியில் தமிழ்நாடு பொது உறுப்பினர் சேர்க்கை முடியும் தருவாயில் உள்ள நிலையில் மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., பகுதி செயலாளர் 121வது மாமன்ற உறுப்பினர் நந்தனம். கி.மதி எம்.சி., தொகுதி பார்வையாளர் தகவல் தொழில் நுட்ப அணி மாநில ஆலோசகர் கோ.வி. லெனின் ஆகியோர் பங்கேற்று ஆலோசனை வழங்குகின்றனர்.

இந்த கூட்டத்திற்கு ஓர் அணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கையை வெற்றிகரமாக முடிக்க உள்ளதற்கு வாழ்த்தும் மற்றும் ஆலோசனை வழங்கி கழக ஆக்க பணி குறித்து ஆய்வு மேற்கொள்ள உள்ளனர். இக் கூட்டத்திற்கு மாநில மாவட்ட பகுதி வட்ட கழக நிர்வாகிகள் அனைத்து அணிகளின் நிர்வாகிகள் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பாக பொறுப்பாளர்கள் (BLA2) மற்றும் (BDA) தகவல் தொழில்நுட்ப அணி மற்றும் பாக இளைஞர் அணி ஆகிய மூன்று நபர்களும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு வட்டச் செயலாளர் மு.இ.ஏழுமலை கேட்டுக்கொண்டுள்ளார்.

சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில்

11ஆம் வகுப்பு பயிலும் 60 மாணவர்களுக்கு கல்விச்சுற்றுலா!

மேயர் திருமதி ஆர். பிரியா கொடியசைத்து தொடங்கி வைத்தார்!

சென்னை,ஆக.20- மேயர் அவர்களின் நிதி நிலை அறிக்கை அறிவிப்பின்படி, சென்னை பள்ளிகளில் 10ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்று, தொடர்ந்து சென்னை மேல்நிலைப்பள்ளிகளில் 11ஆம் வகுப்பு பயிலும் 60 மாணவர்களின் கல்விச்சுற்றுலாவினை மேயர் திருமதி ஆர். பிரியா நேற்று (19.08.2025) ரிப்பன் கட்டட வளாகத்தில் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

சென்னை உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் 10ஆம் வகுப்பு மாணவர்களில் அரசுப் பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்று, சென்னை பள்ளிகளிலேயே தொடர்ந்து 11ஆம் வகுப்பு மேல்நிலைக்கல்வியை தொடரும்

50 மாணவர்களை கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லப்பட்டு வருகின்றனர். கடந்த ஆண்டு மகேந்திர கிரி, விண்வெளி ஆராய்ச்சி மையம் மற்றும் கூடங்குளம் அனல் மின் நிலையம் போன்ற இடங்களுக்கு அழைத்துச் செல்லப் பட்டனர்.

இதனைத் தொடர்ந்து, இந்த கல்வியாண்டில் சென்னை பள்ளிகளில் 81 சென்னை உயர் மற்றும் மேல் நிலைப்பள்ளிகளில் 10ஆம் வகுப்பு பயின்று அரசு பொதுத் தேர்வில் வெற்றி பெற்று, சென்னை பள்ளிகளிலேயே தொடர்ந்து 11ஆம் வகுப்பு தொடரும் மாணவர்களில் மதிப்பெண் தரவரிசை அடிப்படையில் 60 மாணவர்களை தேர்வு செய்து, 10 ஆசிரியர்களுடன் முதற்கட்டமாக ஆந்திரபிரதேசத்தில் உள்ள விண்வெளி ஆராயச்சி மையம் மற்றும் ராக்கெட் செலுத்தும் மையமான ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்திற்கு (ISRO), தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் (TTDC) குளிர்சாதனப் பேருந்துகள் மூலம் அழைத்துச் செல்லப் படுகின்றனர்.

இந்த சுற்றுலா மூலம் மாணவர்களின் அறிவுத்திறன், ஆராய்ச்சித் திறன் மற்றும் கற்றல் திறன் அதிகரிக்கும். மேலும், 10ஆம் வகுப்பில் பயின்று 11ஆம் வகுப்பு சென்னை பள்ளிகளிலேயே பயில வேண்டும் என்ற ஆர்வமும் உருவாகும்.

அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் தமிழ் கா.அமுதரசன் முன்னிலையில்

சென்னை தெற்கு மாவட்ட மாணவர் அணி பகுதி அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள் கூட்டம்!

மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் பா.அருண்குமார் அறிக்கை!

சென்னை, ஆக. 20 - சென்னை தெற்கு மாவட்ட மாணவர் பகுதி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் கூட்டம் இன்று அமைச்சர் மா.சுப்பரிமணியன் தலைமையில் நடைபெறுகிறது. இது குறித்து மாவட்ட அமைப்பாளர் பா.அருண்குமார் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:-

சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி பகுதி அமைப்பாளர்கள் பகுதி துணை அமைப்பாளர்கள் கூட்டம், இன்று (20082025 புதன்கிழமை), மாலை 05.00 மணியளவில், சைதாப்பேட்டை பஜார் சாலையில் அமைந்துள்ள "சென்னை தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில்" மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்ரமணியன் தலைமையில், மாநில மாணவர் அணி துணை செயலாளர் சென்னை மண்டல பொறுப்பாளர் தமிழ் க.அமுதரசன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஆ.ஈஸ்வரமூர்த்தி, ஜெ.சீனிவாசன், எஸ்.கே.தமிழ்வேல் கவி, எஸ்.விஷ்ணு, டி.எஸ்.பி. தமிழ்செல்வன், எஸ்.யமுனாஸ்ரீ ஆகியோர் பங்கேற்கின்றனர்.

அதுபோது சென்னை தெற்கு மாவட்ட பகுதி அமைப்பாளர்கள் பகுதி துணை அமைப்பாளர்கள் மட்டும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : 1 மாணவர் அணி சார்பில் அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெறுகின்ற கருத்தரங்கம் சம்பந்தமாக. 2. மாணவர் அணி ஆக்க பணிகள்.

இவ்வாறு மாவட்ட அமைப்பாளர் பா.அருண்குமார் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.